**செய்தி வெளியீடு எண்: 568** **நாள் : 07.11.2015**

செய்தி வெளியீடு

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள், புதுச்சேரி யூனியன் பிரதேச முதலமைச்சர் திரு. என்.ரங்கசாமி அவர்களின் தாயார் திருமதி பாஞ்சாலி அம்மாள் அவர்களின் மறைவையடுத்து, திரு. என்.ரங்கசாமி அவர்களுக்கு 6.11.2015 நாளிட்டு அனுப்பிய இரங்கல் கடிதத்தின் விவரம் பின்வருமாறு:-

---

தங்களின் அன்புத் தாயார் திருமதி பாஞ்சாலி அம்மாள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 6.11.2015 அன்று காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த வருத்தம் அடைந்தேன்.

அன்புத் தாயாரை இழந்து வாடும் தங்களுக்கும், தங்கள் குடும்பத்தார் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி பாஞ்சாலி அம்மாள் அவர்களின் மறைவு தங்களுக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு என்ற போதிலும், இந்தத் துயரத்தை தாங்கிக் கொள்ளக் கூடிய மனவலிமையை தங்களுக்கும், தங்கள் குடும்பத்தாருக்கும் அளிக்கவும், அன்னாரின் ஆன்மா இறைவன் திருவடியில் அமைதிப் பெறவும், எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

*****

வெளியீடு : இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9

நாள்: 7.11.2015